பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 04 | ஞாயிற்றுக்கிழமை | 18.01.2026 | அதிர்வு 171

## இரண்டு கிலோ கஞ்சா இளவாலையில் மீட்பு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேந்தாங்குளம் பகுதியில் இரண்டு கிலோகிராம் கஞ்சா 07▶

# தமிழினத்தின் எதிர்காலத்தைக் காப்பாற்ற தமிழ்க் கட்சிகளுக்குள் ஒற்றுமை அவசியம்

## இல்லையேல் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் பகிரங்க எச்சரிக்கை




(எஸ்.நிதர்ஷன்)

தமிழினத்தின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் ஒற்றுமை தேவை என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தாங்கள் விரும்பியவாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி செயற்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விரும்பினால் அது நடக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“முரசு” ஊடகத்தின் தயாரிப்பான "INSIDE" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலைமை குறித்து பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பொது விடயங்களிலாவது தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

இதைவிடுத்து 06▶

## தையிட்டி விகாரை விவகாரம்:

# மக்களின் காணிகளை உடனே விடுவியுங்கள்!

## யாழ். நாக விகாரையின் விகாராதிபதி ஜனாதிபதியிடம் நேரில் வேண்டுகோள்



(எஸ்.நிதர்ஷன்)

**தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள பொதுமக்களின் காணிகளை விரைவாக விடுவியுங்கள் என ஜனாதிபதியிடம் தாம் நேரில் வலியுறுத்தினார் என்று யாழ்ப்பாணம் ஸ்ரீநாக விகாரையின் விகாராதிபதி மீகஹஜந்துரே சிறிவிமல நாயக்க தேரர் தெரிவித்தார்.** 06▶




என்னுடைய இந்தப் பத்தி தன்னுடைய பணியை சரியாகவும், கனகச்சிதமாகவும் செய்கின்றது போலும். ஏனெனில் என் பேனாவை மௌனிக்கச் செய்வதற்காக கீழ்த்தரமான முறையில், அபத்தமாகவும், அநாமதேயமாகவும் என் மீது கரி பூசும் தங்கள் பணியை தொடர்ந்து சமூக ஊடகங்கள் ஊடாக தங்களை வெளிப்படுத்த திராணியற்ற – முதுகெலும்பற்ற – தரப்புக்கள் மீண்டும் தொடங்கி இருக்கின்றன.

அவற்றுக்குள் இறங்க முன்னர் ஒரு சிறிய பிளாஷ்பேக்.

என் ஊடகப் பணி 46 ஆண்டுகளைக் கடக்கின்றது. இந்தக் காலத்தில் நான் மொட்டைப் பெட்டிஷன் எழுதியவனல்லன். அல்லது என்னை வெளிப்படுத்தாமல் அநாமதேய செய்தியோ தகவலோ பிரசுரித்து ஒளித்து நின்றவன் அல்லன். மாறாக, நான் எழுதிய செய்திகளுக்கும் விடயங்களுக்கும் அப்பால், நான் பொறுப்பாக இருந்த பத்திரிகைகளில் பிறர் எழுதிய செய்திகள், விடயங்கள் உட்பட பத்திரிகையில் 06▶



# கல்வியை ஆபாசமாக்கும் முயற்சிகளுக்கே எதிர்ப்பு!

## இப்படி சஜித் கூறுகின்றார்



"தரம் 1 தொடக்கம் 6 வரை கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு எந்த எதிர்ப்பையும் யாரும் காட்டவில்லை. கல்வியில் ஆபாசத்தை புகுத்தும் நடவடிக்கைக்கே நாம் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். கல்வியில் கட்டமைப்பு ரீதியிலான மாற்றத்தை முன்னெடுக்குமாறே வலியுறுத்தி வருகின்றோம்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்கி வைக்கும் மற்றுமொரு கட்டம் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதன் பிரகாரம், கிதுல்கல பிரதேச வைத்தியசாலைக்கு 33 இலட்சம் ரூபா பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசாங்கம் பல வேடிக்கையான சம்பவங்களைச் செய்து வருகின்றது. கல்விச் சீர்திருத்தங்கள் முறையான கலந்துரையாடல்கள் இல்லாமல் முறைசாரா முறையில் முன்னெடுத்து வருகின்றது.

கல்வி சீர்திருத்தப்பட வேண்டும் என்று கூறி எதிர்க்கட்சி பிரபஞ்சம் வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வந்த சமயங்களில், தற்போதைய ஆளும் தரப்பினர் எம்மைப் பார்த்து கிண்டலாக சிரித்தனர். ஆங்கிலம், சீனம், ஜப்பான் மற்றும் இந்தி மொழிக் கல்வியின் முக்கியத்துவம் குறித்து நாம் பேசிய சமயங்களில், தற்போதைய ஆளும் தரப்பு அமைச்சர்கள் எனக்குகே கிண்டல் அடித்துப் பேசி, சேறு பூசும் நடவடிக்கைகளைச் செய்தனர்.

எதிர்க்கட்சி கல்வி சீர்திருத்தங்களுக்கு ஒருபோதும் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. கல்வியில் ஆபசத்தை புகுத்துவதற்கே நாம் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

இந்தப் பாடத்திட்டங்களைத் தயாரிப்பதற்குப் பல கட்ட நடவடிக்கைகளைச் செய்ய வேண்டியுள்ளன, ஆனால் இன்று அது எதுவும் முடிக்கப்படவில்லை. ஆகையால் இதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. குறைபாடுகள், மீளாய்வுகள் முறையாக நிவர்த்தி செய்யப்பட்டிருந்தால், இந்த ஆபாச விடயங்கள் சேர்க்கப்பட்டிருக்கா.

நோய்வாய்ப்பட்டவர்களைகே குணப்படுத்தவும், அவர்களின் வாழ்க்கையில் நலவை நாடவுமே வைத்தியசாலைகளுக்கு இவ்வாறு உபகரணங்களையும் மருந்துப் பொருட்களையும் வழங்கி வருகின்றோம்.

இதுவரை காலமும் அரச அதிகாரத்துடனே நாட்டுக்கு ஏதாவது ஒரு வகையில் பெறுமானம் சேர்க்கப்பட்டு வந்தன. ஆனால் வரலாற்றில் முதல் முறையாக எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாம் நாட்டுக்கு பெறுமானம் சேர்க்கும் பணியை முன்னெடுத்து வருகின்றோம். மக்களின் ஆயுட்காலத்தை அதிகரிப்பதற்காகவே இதனைச் செய்து வருகின்றோம்." – என்றார்.









# அறிவை ஏந்த வேண்டிய கல்வி அரசியல் அம்பாக மாறும் அவலம்

## சஜித் அணி மீது அமைச்சர் நளிந்த பாய்ச்சல்

இந்த நாட்டில் கல்வியைக் கூட அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தும் நிலைக்கு சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணி வந்துவிட்டது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"பேரிடரை வைத்து அரசியல் நடத்திய எதிரணி, தற்போது கல்வி மறு சீரமைப்பையும் குழப்ப முற்படுகின்றது. இதற்கு மக்கள் இடமளிக்கமாட்டார்கள்.

கல்வியில் ஆபாசத்தை புகுத்துவதற்கு முயற்சி இடம்பெறுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டையும் அடியோடு நிராகரிக்கின்றோம்.

நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் கல்வி மறுசீரமைப்பு நிச்சயம் நடக்கும்." – என்றார்.



# ரணில் – சஜித் கூட்டணிக்கு எவ்வித தடையும் இல்லை!

## முன்னாள் அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு



ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவதற்கு எவ்வித தடையும் இல்லை என்று முன்னாள் அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தலதா அத்துகோரலவுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியையும் இவரே சிறிது காலம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இரு தரப்பு இணைவு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒன்றிணைவது தொடர்பில் சாதகமான சூழ்நிலையே உள்ளது. எனவே, தடைகள் இருக்கும் எனக் கருத வேண்டியதில்லை. எதிர்காலத்தில் சங்கமம் நடக்கும் என உறுதியாக நம்புகின்றோம். விரைவில் இது சாத்தியப்படும்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்குப் பதவி என்பது முக்கியம் அல்ல. எமக்கு நாடுதான் முக்கியம்.

நாடு சரியான திசையில் செல்ல வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். ஆனால், இந்த ஆட்சியின் கீழ் அது நடப்பதாகத் தெரியவில்லை." – என்றார்.

# இந்த ஆண்டின் முதல் 15 நாள்களில் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை



இந்த ஆண்டின் முதல் 15 நாள்களில் 131,898 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேலும் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை கடந்த வியாழக் கிழமை பதிவாகியுள்ளனர். அன்றைய தினம் 10,483 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் எனவும் 23,786 பேர் வந்துள்ளனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைதெரிவித்துள்ளது. கூடுதலாக, ரஷ்யா, இங்கிலாந்து மற்றும் ஜேர்மனியில் இருந்தும் அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.



# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீட்டுச் சட்டம் மன்னாரில் நேற்று தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டு வரப்பட உள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டம்(PSTA) தொடர்பான ஆபத்துக்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் சனிக்கிழமை மன்னாரில் இடம் பெற்றது.

வடக்கு கிழக்கு சிவில் ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

"தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக முன்மொழியப்பட்டபயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டம் புதிய சட்டமாக வர உள்ளது. இது நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது. ஆனால் பரந்த வரையறைகள் மற்றும் கடுமையான பிரிவுகள் காரணமாக இது பொது மக்களின் போராட்டங்கள், சிவில் சமூக செயற்பாடுகள் மற்றும் புலம்பெயர் சமூகத்தினரை குறிவைக்க கூடும்" என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், இலங்கை குடிமக்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் இந்த சட்டத்தின் கீழ் வருவார்கள். சமூக ஊடகங்களில் கருத்து தெரிவிப்பவர்களும் பாதிக்கப்படலாம் எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

கலந்துரையாடலில் வளவாளராக சட்டத்தரணி எஸ்.டினேசன் கலந்து கொண்டார். உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், கடற் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும. இதில் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்டவர்கள் இந்த நாட்டில் இச்சட்டம் தேவை இல்லை என்பதையும், தாம் இச்சட்டத்தை அமுல் படுத்தும் நோக்கத்தை வன்மையாக கண்டிக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.












# தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் விளையாட்டுப் போட்டி யாழில் ஆரம்பம்

தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் 2025 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி நேற்று மதியம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஏ.பி.கே.பிரேமதிலக தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன் இரண்டாம் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

இதில் தேசிய மாணவர் படையணியின் அதிகாரிகள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.














## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியான முழுச் செய்திகளுக்கும் நானே பொறுப்பு, நான் மட்டுமே பொறுப்பு என்று பல மட்டங்களில் பொறுப்பாளனாக இருந்திருக்கிறேன். அது சட்டம், காவல்துறை, முப்படைகள், அரச நிர்வாகம், போராளிகள், இயக்கங்கள், இந்திய அமைதி காக்கும் படை, ஜனாதிபதி முதற் கொண்டு பாதுகாப்புச் செயலாளர் வரை எந்தத் தரப்பாக இருந்தாலும் நான் பொறுப்பாக இருந்த பத்திரிகைகளில் வெளியான செய்திகளுக்கு நானே பொறுப்பு என்று தனித்துவமாக துணிச்சலுடன் நின்றிருக்கிறேன். கொடூர யுத்தத்துக்கு மத்தியிலும் சரி, பின்னரும் சரி, என் ஊடகத்தில் வந்த எந்தச் செய்திக்கும், தகவலுக்கும் பிறர் ஒருவரை பொறுப்பு கூறி, நான் அந்தப் பொறுப்பிலிருந்து விலகித் தள்ளி நின்றேன் என்று என் பத்திரிகை நிர்வாகம் கூட என்னை பார்த்துக் கூற முடியாத அளவுக்கு நான் பொறுப்பேற்று வந்திருக்கிறேன். இன்றும் என் பத்திரிகையில் வெளியாகும் ஒவ்வொரு செய்திக்கும் நானே பொறுப்பு என்பதை வெளிப்படையாகவும் தெரிவித்து வருகிறேன்.

அப்படியான எனக்கு எதிராக, தங்கள் பெயர்களையோ அடையாளங்களையோ வெளிப்படுத்தாமல், அநாமதேயமான ஊடகப் பெயர்களில், பொறுப்புக் கூறலைப் புறம்தள்ளி, பொய்யான – அபவாத – குற்றச்சாட்டுகளை முதுகெலும்பில்லாத சில கீழ்த்தரமான சமூக ஊடகங்கள் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன. அதன் மூலம் என் பேனாவை மௌனிக் செய்யலாம் என்று அவர்கள் கற்பனை பண்ணுகிறார்கள் போலும்.

இந்த அபவாத குற்றச்சாட்டுகளை மட்டுமல்லாமல், மிக மோசமான அச்சுறுத்தல்களையும் என் செய்திக்காக நான் எதிர்கொண்டிருந்த போதிலும் என் பணியில் இருந்து நான் ஒதுங்கியவன் அல்லன். என்னை என் குடும்பத்தவர்கள், உறவினர்கள் முன்னிலையில் மோசமாக மானபங்கப்படுத்தி, தாக்கி, பின்னால் கை விலங்கிட்டு, கண்களைக் கட்டி, கடத்திச் சென்று, சித்திரவதைகளை மேற்கொண்ட பின்னர், அந்தக் கடத்தலை பயங்கரவாத சட்டத்தின் கீழ் தடுப்பு காவல் உத்தரவாக்கி, சுமார் மூன்று மாதங்கள் நெருக்கடி தந்த பின்னரும், நீதிமன்றத்தினால் விடுதலையான அடுத்த நாள், காலையிலிருந்து என் பேனா மீண்டும் கனன்று எழுதத் தொடங்கியது என்பது வாசகர்கள் பலருக்கு தெரியும். ஆகவே நடக்காத விடயங்களை நடந்ததாக எனக்கு எதிராக இட்டுக் கட்டி, அபவாதமாகச் சுமத்தி, தங்களை அடையாளப்படுத்தாமல் ஒளித்திருந்து வதந்தி பரப்பும் தரப்புகளுக்கு நான் என்றும் அஞ்சி அடங்கி விட் மாட்டேன் என்பதை திரும்பவும் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

புலனாய்வு என்ற அநாமதேய பெயரில் கிசுகிசு செய்திகளை எழுதி வரும் ஒரு சமூக ஊடகம், என்னை மிக மோசமாக விமர்சித்து மீண்டும் என்னை சி.ஐ.டி. விசாரித்திருப்பதாக செய்தி வெளியிட்டு இருக்கின்றது.

யுத்தம் முடிந்த பின்னர் என்னுடைய பத்திரிகைகளில் வந்த செய்திகளுக்காக சில சமயங்களில் எனக்குத் தெரியாமலேயே பொலிஸ் தம்பாட்டில் விசாரணைகள் நடத்தியிருக்கக் கூடும். வவுனியா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திலீபன் பரிந்துரையில் மதுபான சாலை உரிமம் வழங்கப்பட்டமை தொடர்பாக சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'முரசு' இதழில் செய்தி தொடர்பாக அவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்ய, அந்த முறைப்பாடு தொடர்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஒரு தடவை என்னோடு தொலைபேசியில் பேசியிருக்கிறார். எந்தச் சட்டத்தின் கீழ் என்னோடு தொடர்பு கொள்கின்றீர்கள் என்ற விவரத்தோடு என்னை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் என்று கூறி தொலைபேசியை துண்டித்தேன். அதற்குப் பின்னர் அவர்கள் என்னோடு தொடர்பு கொள்ளவில்லை. எங்கள் செய்தி சரியானது என்பதற்கான தொடர் ஆதாரங்கள், தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இதைத் தவிர, யுத்தம் முடிந்த பின்னர் கடந்த 16 ஆண்டுகளில் பொலிஸார் என்னிடம் எந்த விசாரணைக்கும் வரவில்லை. விசாரணையையும் நடத்தவில்லை.

ஆனால் 'கொசிப்' செய்திகளை, தம்மை அடையாளப்படுத்தாமல், ஒளித்து இருந்து வெளியிடும் சில குசும்பு ஊடகங்கள், எனக்கு எதிரான மோசமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன எனவும், பொலிஸார் என்னை விசாரிக்கின்றனர் என்றும் பல தடவைகள் அடுத்தடுத்து செய்தி வெளியிட்டு வருகின்றன.

அத்தகைய ஒரு செய்தி தொடர்பிலேனேனும், ஏதேனும் ஒரு தகவலை, சான்றை, விசாரித்த பொலிஸார், பொலிஸ் நிலையம், திகதி, காலம், மற்றும் முறையீட்டாளர், விடயங்களுடன் வெளிப்படுத்த முடியுமா என்று அவர்களுக்கு பகிரங்கமாக சவால் விடுக்கிறேன்.

மூன்று மாதத்திற்கு, நான்கு மாதத்திற்கு ஒரு தடவை என்னுடைய எழுத்து தங்களைக் குத்தியதும் என்னை பொலிஸார் விசாரிக்கிறார்கள் என்று செய்தி வெளியிடும் இந்த பிரகிருதிகளுக்குத் தொடர்ந்து பதில் அளித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

ஆனாலும். இத்தகைய செய்தி ஒன்றை, நான் முன்னர் பாதுகாத்து வளர்த்தெடுத்த ஒரு பத்திரிகையின் நிர்வாகியும், விவஸ்தையே இல்லாத அந்த பத்திரிகையின் கேடுகெட்ட ஆசிரியரும் என் பெயரைக் குறிப்பிடாமல் அந்தச் செய்தியை ஊகமாக வெளியிட்டு இந்தக் கீழ்த்தரமான ஊடக பண்பியல்புகளில் தங்களையும் இணைத்துக் கொண்டார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். தாங்கள் எழுதிய அந்தச் செய்திக்கு இன்று வரை ஓர் ஆதாரத்தைக் கூடக் காட்ட முடியாத கேவல ஊடக தர்மத்தின் பிரகிருதிகள் அந்த இருவரும். அதனையும் நினைவூட்டிப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இப்போது என் கோபம் எல்லாம் இந்த அநாமதேய ஊடகங்கள் மீது அல்ல. அப்படி பொறுப்பின்றி, தங்களை அடையாளப்படுத்தாமல், கற்பனையில் அபவாதங்களை அள்ளி வீசிக் கீழ்த்தரமாக நடக்கும் அந்த சமூக ஊடகங்களுக்குப் பின்னால் பல்லாயிரக்கணக்கில் பின் தொடரும் தமிழர்கள்தான் இத்தகைய கேவலமான பண்பியல்பு சமூகத்தில் ஊன்றுவதற்கு காரணமானவர்கள். அவர்களில் யாரும் என்னைப் பற்றி எழுதிய செய்திகளுக்கு ஆதாரம் எங்கே என்று அந்த ஊடகங்களைப் பார்த்து கேட்கவில்லை. அல்லது கேட்டு பின் குறிப்புகளை போடவில்லை. ஆனால் அந்த அநாமதேய ஊடகங்கள் என்னைப் பற்றி எழுதும் ஆதாரமற்ற அபவாதங்களை இவர்களில் பலர் தங்களுடைய றாயவளயிக்களில் பலருக்கும் பரிமாறி வருவதை அறிகிறேன். அதனால் எனக்கு எந்தக் குறைவும் வந்து விடப் போவதில்லை. ஆனால் அத்தகைய ஒரு whatsapp பரிமாற்றத்தில் "இவன் (என்னைக் குறிப்பிட்டு) விரைவில் அரசியலுக்கு வந்து விடுவான். அதற்கு முன்னர் அவனை அடித்து வீழ்த்துவதற்கு இந்த whatsapp செய்தியை மேலும் பலருக்கு பகிருங்கள்" – என்று ஒருவர் அனுப்பி இருந்ததையும் இன்னொரு தொலைபேசியில் பார்த்தேன்.

இத்தகைய அபவாதக் குற்றச்சாட்டுகளைபார்க்கின்றபோது இன்னமும் ஆவேசமாகவும் உறுதியாகவும் தெளிவாகவும் என்னுடைய எழுத்துப் பணியை நான் தவறாமல் செய்ய வேண்டும் என்ற மன ஓர்மம் எனக்குள் பிறக்கின்றது.

ஊடகவியலாளர்களான எங்களுக்கு இத்தகைய அநாமதேயங்களை அடையாளம் காண முடியாது என்று யாராவது நினைத்தால் அதுபோல சின்னத்தனம் இருக்க முடியாது. எங்களால் அந்த ஊடகக் கோடாரிக் காம்புகளை நிரூபிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் யார் என்பது எங்களுக்கு தெரியும். எங்கள் பதிலை அநாமதேயமாக முன் வைக்க மாட்டோம். ஆதாரங்களோடு அவர்களை – அவர்களின் செயற்பாடுகளை –அம்பலப்படுத்துவதன் மூலம் வெளிப்படுத்துவோம். அந்த பணி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது என்று நினைக்கிறேன்.

இன்னொரு இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் ஒரு தடவை பொலிஸ் வந்தார்கள், விசாரணை செய்தார்கள், கைது செய்தார்கள் என்று ஏதாவது என்னைப் பற்றி எழுதுவார்கள். இப்போது சி.ஐ.டியினர் என்னை விசாரித்தனர் என எழுதி இருக்கிறார்கள். தங்களை அம்பலப்படுத்தாவிட்டாலும், குறைந்த பட்சம் தாங்கள் எழுதிய செய்தி உண்மை என்று நிரூபிப்பதற்காகவேனும் யார் அந்த சி.ஐ.டி., எப்போது வந்தார்கள், சம்பந்தப்பட்ட முறைப்பாட்டாளர் யார் என்ற விவரங்களை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்று சவால் விடுகிறேன்.

இத்தகைய அநாமதேயங்களின் செய்தியை நம்பி கொஸிப் கதை பரிமாறும் தமிழ் வாசகர்களே, இத்தகைய முதுகெலும்பில்லாத பேடிகளுக்கு உரமிடும் கீழ்த்தரமானவர்கள் என்பதை மீண்டும் ஒரு தடவை குறிப்பிட விரும்புகிறேன்.

* * *

யாழ்ப்பாணம், கொக்குவிலில் 'முழு நாடும் ஒன்றாக' என்ற தலைப்பிலான நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அங்கு குறிப்பிட்ட கருத்து தென்னிலங்கையில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கின்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தையிட்டி திஸ்ஸ விகாரை சர்ச்சை தொடர்பில் கருத்து தெரிவிக்க முயன்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னைய ஜனாதிபதிகள் போல தமிழர்களின் உரிமைக் கோரிக்கை என்றதும் அதனை 'இனவாதம் கிளப்பும் போக்கு' என்று தமது சிங்கள தலைமைகளின் வழமையான பரவணிப் பல்லவியைப் பாடத் தவறவில்லை.

தையிட்டி விகாரை விவகாரத்தில் இரண்டு பக்கத்துக்கும் – தமிழர் தரப்புக்கும், பௌத்த, சிங்கள பேரினவாதத் தரப்புக்கும் இடையில் – தாம் நடுநிலையாளர் எனக் காட்ட முயன்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, அதற்காக தென்னிலங்கைப் பேரினவாதிகளுக்கும் ஒரு தட்டுத் தட்டி வைக்க எண்ணினார் போலும்.

தையிட்டி திஸ்ஸ விகாரை குறித்துப் பேசத் தொடங்கிய அவர் "போயா நாளில் 'சில்' அனுஷ்டிப்பதற்காக சிலர் சிறிமகாபோதியை (அநுராதபுரத்தில் இருக்கும் புனித வெள்ளரசு விருட்சத்தை) கடந்து – தாண்டி– யாழ்ப்பாணத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு (தையிட்டியை அவர் குறிப்பிடுகிறார்) செல்வது மத ரீதியான மதத்துவமான செயல் அல்ல, மாறாக மத வெறுப்பால் இயக்கப்படும் செயலாக கருதப்படக் கூடியது" என்று அவர் குறிப்பிட்டார். இதுவே தென்னிலங்கையில் பெரும் சீற்றத்தை

07

## இரகசியம் பரகசியம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)
ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

அதேசமயம் அவர் போயா நாள்களில் தையிட்டி விகாரையைச் சுற்றி கூடும் குழுக்களையும் விமர்சித்தார். “நிலப் பிரச்சினைகள் தொடர்பாகப் போராட்டம் நடத்துகின்றனர் எனக் கூறுகின்றனர். அத்தகைய நடவடிக்கைகள் உண்மையான நிலத் தகராறுகளுக்குப் பதிலாக இன வெறியால் தூண்டப்பட்டவை.” – என்றார் ஜனாதிபதி.

“ஒவ்வொரு போயா தினத்திலும் கோயில்களைச் சுற்றி நிலத்திற்காகப் பாராட்டம் நடத்துவதாகக் கூறும் குழுக்கள் உண்மையில் நிலத்திற்காகப் போராட்டம் நடத்தவில்லை. மாறாக இனவெறி காரணமாகவே போராட்டம் நடத்துகிறார்கள். அந்தப் பகுதிகளில் போராட்டம் நடத்துபவர்கள் உண்மையில் நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கிறார்களா என்பதை விசாரிக்குமாறு புலனாய்வுத் துறையினருக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்.” என்று ஜனாதிபதி கூறினார்.

இது வழமையான தென்னிலங்கை அரசியல் பாணிதான். தமிழர்கள் தங்கள் நில உரிமையைக் கேட்டால் – அதை மீறி தங்களின் ஆக்கிரமிப்பு அட்டகாசத்தை நிலை நிறுத்துவதற்காக சிங்களத்தினால் பலவந்தமாகக் கட்டப்பட்ட தையிட்டி விகாரையைச் சுட்டி காட்டினால் – தமிழர்கள் இனவாதம் கிளப்புகிறார்கள் என்று ஜனாதிபதி கூறுகிறார். இது புதிய கருத்தியல் அல்ல. காலம் காலமாக நாட்டின் அதிகாரத்தைக் கைகளில் வைத்திருந்த அனைத்து ஜனாதிபதிகளின் பரவணிக் கருத்தியல் வெளிப்பாடுதான்.

ஆனால் தென்னிலங்கை மதவாதிகள் மகாபோதியை கடந்து தையிட்டிக்கு ‘சில்’ அனுஷ்டிக்க வருவது மத செயலல்ல, மத வெறுப்பு செயல் என்று ஜனாதிபதி குறிப்பிட்ட விடயம் தென்னிலங்கையில் நாமல் ராஜபக்ஷ, விமல் வீரவன்ஸ போன்று இனவாதிகளை உசுப்பி விட்டிருக்கின்றது என்று தெரிகின்றது.

“அப்படியானால், வடக்கிலும், கிழக்கிலும் எத்தனையோ இந்துக் கோயில்கள் இருக்க அவற்றையெல்லாம் தாண்டி, தமிழ் மக்கள் கதிர்காமத்துக்கு வருவது மத வெறுப்புச் செயலா?” – என்று நாமல் ராஜபக்ஷ போன்றோர் கேள்வி எழுப்பி இருக்கின்றனர்.

ஆக, ஜனாதிபதியின் வடக்கு உரை, ‘சும்மா கிடந்த சங்கை ஊதிக் கொடுத்த வேலை’ போலத்தான் மாறும் போல தென்படுகின்றது.

# பிரஜாசக்திக்கு எதிராக கையெழுத்து வேட்டை!

### தமிழ்த் தேசியக் கட்சியின் அமைப்பாளர் நிஷாந்தன் தெரிவிப்பு



“பிரஜாசக்தி என்பது ஜே.வி.பி. கட்சியைவளர்ப்பதற்காகஉருவாக்கப்பட்டதே தவிர அது மக்களுக்கான திட்டம் கிடையாது. பிரஜாசக்திக்கு எதிராக எமது யாழ். மாநகர வட்டாரத்தில் இருந்து கையெழுத்து வேட்டையை விரைவில் ஆரம்பிக்கவுள்ளேன்.”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் அமைப்பாளரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான அ.நிசாந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“வறுமை ஒழிப்பு என்ற போர்வையில் பிரஜாசக்தி என்ற ஒரு திட்டத்தை ஜே.வி.பி. அரசு ஆரம்பித்துள்ளது. அந்தப் பிரஜா சக்தியில் தமது கட்சியின் நேரடி உறுப்பினர்களை அல்லது விசுவாசிகளை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற வட்டாரங்களிலும் நியமித்துள்ளார்கள்.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள மாகாண சபை மற்றும் வேறு தேர்தல்களை இலக்காகக் கொண்டும், கட்சியை வளர்ப்பதை நோக்காகக் கொண்டும் இந்தப் பிரஜாசக்தி ஆரம்பிக்கப்பட்டது. ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவின் எண்ணக்கருவிலேயே இந்தப் பிரஜாசக்தி உருவாக்கப்பட்டது. ஆகையால் இந்தப் பிரஜாசக்தி திட்டத்தை நான் வன்மையாக எதிர்க்கின்றேன்.

பிரஜாசக்தி என்பது இந்த அரசையும் தாண்டி ஒருபடி மேலே வந்துள்ளது. அரசின் பிரதேச செயலகளின் கீழுள்ள கிராம சேவகர்களே இதுவரை அந்தக் கிராமத்தின் தேவைகளான வீடு, காணி, உணவுத் தேவை, வறுமை, வாழ்வாதாரம் போன்ற விடயங்களை அரசின் உதவி மூலம் பெற்றுக்கொடுப்பார்கள். ஆனால் அதை மழுங்கடிக்கும் வகையில் பிரஜாசக்தி உருவாக்கப்பட்டுள்ளது.

என்.பி.பி. என்பதைத் தாண்டி ஜே.வி.பியானது இன்று வடக்கு, கிழக்கிலே மையம் கொண்டுள்ளது. ஜே.வி.பி. தமது கட்டமைப்பை விரிவுபடுத்துவதன் அடிப்படையிலேயே இந்தப் பிரஜாசக்தி ஆரம்பிக்கப்பட்டது.

பிரதேச செயலர் தலைமையிலான கட்டமைப்பின் கீழ் கிராம சேவகர்கள் இருக்கின்ற நிலையில், அரச கட்டமைப்புக்கு நிகரான இன்னுமொரு கட்டமைப்பான பிரஜாசக்தியை உருவாக்கி அரச கட்டமைப்பை மீறியிருக்கின்றார்கள்.

பிரஜாசக்தியை வடக்கு, கிழக்கில் நாங்கள் அனுமதிக்க முடியாது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் இது தொடர்பாக ஒரு தெளிவான அறிவிப்பை விடுத்து பிரஜாசக்திக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார். உண்மையில் அது பாராட்டத்தக்க விடயம்.

பிரஜாசக்திக்கு எதிராக யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட எனது வட்டாரத்திலிருந்து கையெழுத்து வேட்டையை ஆரம்பிக்கவுள்ளேன். மேலும் இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை ஏனைய பிரதேச சபைகளுக்கும் கொண்டு செல்லவுள்ளேன். இதற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்.

சுயநிர்ணய உரிமை அதாவது, தமிழர்களைத் தமிழர்கள்தான் ஆள வேண்டும் என்று நாங்கள் கூறி வருகின்றோம். இதற்காக நாங்கள் 75 வருடங்களாக ஆயுத ரீதியிலும், அஹிம்சை ரீதியிலும் போராடி வருகின்றோம். இன்று ஆட்சியில் இருக்கும் ஜே.வி.பி. கட்சியினர் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.” – என்றார்.

## மக்களின் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்றுமுன்தினம் பிற்பகல் யாழ். நாக விகாரைக்கும் சென்று அங்கு விகாராதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக யாழ். ஸ்ரீநாக விகாரையின் விகாராதிபதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற தமிழ் மக்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தவகையில் தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினையை ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். பொதுமக்களுடைய காணிகளை விடுவிக்க வேண்டும் என்பதையும் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். ஜனாதிபதி அதனை ஏற்றுக்கொண்டார் என்றே தெரிகிறது.

விகாரைக்குப் பக்கத்தில் உள்ள மக்கள் மற்றும் காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடி விரைவாக ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.

எனக்கும் இந்தக் காணிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நயினாதீவு ஸ்ரீநாக விகாரையின் விகாராதிபதிக்கே அங்கு தொடர்பு உண்டு. ஆனால், பொது மக்கள் சார்பாகவே எனது கருத்தை முன்வைத்தேன்.

மேலும் போதைவஸ்து பிரச்சினைகள் காணப்படுகின்றமையால் இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். ஆகவே, வடக்கு மாகாணத்தில் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்ற விடயத்தையும் தெரிவித்தேன்.” – என்றார்.

## இரண்டு கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மீட்கப்பட்டுள்ளது.

இளவாலை விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று மாலை இந்தக் கஞ்சாப் பொதி மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தமிழினத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்னும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவோமாக இருந்தால் அது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

தற்போதையஅரசதரப்பினர்கொள்கை ரீதியாக அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்கள்.

இந்த நாட்டில் தேசிய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமெனில் நிச்சயமாகப் புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும்.” – என்றார்.

**இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், முக்கிய அரசியல் கேள்விகளுக்கு நேரடியான பதில் களைத் தெளிவாக வழங்கினார். அவருடனானமுழு நேர்காணலை காணொளியில் தவறவிடாமல் பாருங்கள்.**

CLICK HERE VIDEO

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அநுராவுக்கான பாடம்

தைப்பொங்கலை ஒட்டி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் விஜயம் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தாமல் இல்லை.

பலாலியில் பொதுமக்கள் மத்தியில் வீதி வழியே அதிகம் பாதுகாப்பு பந்தா இல்லாமல் அவர் காலையில் நடைபயிற்சி செய்திருக்கிறார்.

வடக்கில் சென்ற இடமெல்லாம் மக்களோடு நெருங்கிப் பழகி இருக்கிறார். பாதுகாப்புக் கெடுபிடிகளைத் துறந்து மக்களை அண்டி அவர் பழகினார் என்று பலரும் பேசிக்கொள்கிறார்கள். அவற்றைத் தொலைக்காட்சியிலும் சமூக ஊடகங்களிலும் தாராளமாகப் பதிவிட்டிருக்கிறார்கள்.

தவிரவும், அவர் பங்கு பற்றிய நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையானோர் - குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள் - கலந்து கொண்டனர் என்று காட்டப்படுகின்றது.

இவை எல்லாம் உண்மை என்றாலும், இவற்றுக்கு ஊடாகச் சொல்லப்படும் செய்தி என்ன என்பது குறித்து பலரும் பேசுகிறார்கள். ஆனால், இது விடயத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்குச் சொல்லப்படுகின்ற விடயம் யாது என்பது பற்றி யாரும் பேசுபவர்களாகத் தெரியவில்லை.

கொழும்பில் கூட இப்படி காலி முகத் திடலில் பாதுகாப்பு பந்தா இன்றி காலை நடைபயிற்சி போகும் நிலையில் நாட்டின் ஜனாதிபதி இல்லை. வடக்கில், மக்களையும் பிரமுகர்களையும் அரசியல் தலைவர்களையும் அவர் நெருங்கும் அளவுக்கு தென்னிலங்கையில் நெருங்கக் கூடிய நிலைமை இருக்கின்றதா என்பது கேள்விக்குரியது.

அநுர குமார திஸநாயக்க மாத்திரமல்லர், முன்னர் பதவியில் இருந்த சந்திரிகா, மைத்திரி, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் போன்றவர்களுக்கும் கூட வடக்கில் மக்களோடு இப்படிப் பழகுவதற்கு, நெருங்குவதற்கு, அரசியல் நாடகங்கள் நடிப்பதற்கு விருப்பம் இருந்தது. ஆனால் பாதுகாப்பு நிலைவரம் அவர்களையும் மக்களையும் தூரத்தூரத் தள்ளி வைத்துவிட்டது.

அந்தப் பாதுகாப்புக் கெடுபிடி தமக்கு வடக்கில் இல்லை என்ற உறுதிப்பாட்டோடு அநுர குமார திஸநாயக்க இங்கு மக்களோடு நெருங்கிப் பழகினார் என்பதுதான் உண்மை. தென்னிலங்கையில் கூட இன்று பாதாள உலக அச்சுறுத்தல் உண்டு. ஆனால் அத்தகைய அச்சுறுத்தல் எதுவும் நூற்றுக்கு இருநூறு வீதம் வடக்கில் இல்லை என்பதை தெரிந்து கொண்டுதான் இவ்வளவு தூரம் ஜனாதிபதி மக்களோடு இணைங்கி, இறங்கிப் பழகியிருக்கிறார். இதன் ஊடாக அவர் உணர்ந்து கொண்ட செய்தியை அவர் உள்வாங்கினாரா என்பதுதான் கேள்வி.

இவ்வளவு தூரம் மக்களோடு நாட்டின் ஜனாதிபதியே நெருங்கி பழகக் கூடிய அளவுக்கு வன்முறை ஆபத்தே இல்லாத வடக்கில் இத்தனை நிலப்பரப்பை முப்படைகள் தொடர்ந்தும் ஆக்கிரமித்து வைத்திருக்கலாமா? வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகம் எங்கும் நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு படையினரை குவித்து வைத்திருப்பது நியாயமா? வன்முறை வழியை முழுமையாகக் கைவிட்ட தமிழர்களை நம்பி இவ்வளவு தூரம் இறங்கி வரும் ஜனாதிபதி, அவர்கள் தங்கள் விடயங்களை தாங்களே கையாள கூடிய விதத்தில் அதிகார பகிர்வை அவர்களுக்கு அளிப்பதற்கு இனியும் ஏன் பின்னடிப்பு? அரசியல் கைதிகள் விடுதலைக்கும் பிற விடயங்களுக்கும் ஏன் இழுத்தடிப்பு?

ஆக, ஜனாதிபதியின் இந்த வடக்கு விஜயம் மூலம் தமிழ் மக்கள் படிக்க வேண்டிய விடயங்கள் அல்ல, தமிழ் மக்களின் நடத்தை மூலம் ஜனாதிபதி படித்து, உள்வாங்கி, பிரதிபலிக்க வேண்டிய விடயங்கள்தான் நிலுவையில் அதிகம் உள்ளன. அதனை அவருக்கும் அவர் தரப்பினருக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.



# மலினமான அரசியல் வணிகம்

சூதாட்டத்தை விட கேவலமானது அரசியல் எனும் விமர்சனமுண்டு. அதிகாரத்தைத் தொடர்ந்து சுவைக்க நினைப்பவர்கள் எவரும் விதிவிலக்கற்றவர்களே. அரசியலில் நின்று, நிலைத்து, பதவியை அனுபவிக்க வேண்டுமாயின் பன்முகப் பரிமாற்ற செயல் நிலையை ஒரு தளத்தில், பல கோணத்தில், பல முகத்தை காண்பிக்க வேண்டிய நிலெளவரம் காணப்படுகிறது.

பொது வாழ்க்கையில் கூட இப்பொழுது உள்ளதை உள்ளபடி பேசுவதோ, யதார்த்தத்தை பேசுவதோ சாத்தியமற்ற ஒன்றாக – எழுதப்படாத, எழுதப்படும் விதியாக – மாற்றம் பெற்றுள்ளது. பொய்யும், புரட்டும், வஞ்சகமும், சூதும், ஏமாற்றமும், கபடமும், புறங்கூறுதலும், உண்மையின் நிழல் படாத பொய் பேசுவதும், இத்தகுதிகள் இல்லாத எவரும் அரசியல் களத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்குரிய தகுதியற்றவர்களாகவே இந்தச் சமூகப் போட்டி அரசியல் சந்தை அவர்களுக்குச் சொல்லாமல் சொல்கிறது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரோடு அரசியலில் குறைந்தபட்ச அடிப்படை அறமும் நேர்மையும் சத்தியமும் காணாமல் போயுள்ளன.

மென்சக்தி உறவாடலில் கூடவே இருந்து ஒருவரை ஏமாற்றுவதே அடிப்படைத் தகுதியாக கொள்ளக் கூடியதாக இன்றைய சமூகச் சந்தை வியாபித்து நிற்கிறது.

அந்தச் சாக்கடையில் மூழ்காமல் எவரும் அரசியல் அரங்கில் பிரகாசிக்க முடியாது. உண்மை பேசுகின்றவர்கள் எவரும் இந்த அரசியல் அரங்கில் நிழலைக்கூட பதிக்க முடியாது. அந்த அளவிற்கு சமூகத்தின்பிற்போக்குத்தனம்முன்னிலைஅடைந்துள்ளது.

இந்தச் சாக்கடையில் உட்பட்டாதவர்கள் இல்லை. அரசியலில் மட்டுமல்ல, சமூக அமைப்புகளிலும் கூட, குறைந்தபட்சம் குடும்பம் கூட நடத்த முடியாது. இராஜதந்திர – இராஜிக அணுகுமுறை என்பது தூய தமிழில் பார்த்தால் பிற்போக்குத்தனம் அல்லது போக்கிலித்தனம் என்பதே அர்த்தமாகும்.

இடதுசாரி சிந்தனையில் உள்ளவர்கள் கூட வலதுசாரிகளின் செயல்பாட்டை மிஞ்சியவர்களாகவே காணப்படுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பவாத சகதிக்குள் அநுரகுமார திஸநாயக்காவும் விதிவிலக்கு அற்றவராகவே காணப்படுகிறார். வடக்கு மக்களை ஏமாற்றுவதில் மிகவும் வல்லவராக காணப்படுகிறார். ஜே.வி.பியின் உண்மை முகம் இன்றைய இளைய சமூகத்துக்குப் புரியவில்லை. வரலாறை தேடி அறிந்து கொள்கின்ற அளவுக்கு அவர்கள் முனையவில்லை. கடந்த 25 ஆண்டுகளாக அது பேசிய இனவாத சகதியை மறந்து விட்டு, அல்லது மற்றவர்களும் மறந்து விடுவார்களோ என்று எண்ணுவது மிக மோசமாக இழிநிலை அரசியலாகும்.

இந்த மூன்றாம் தர அரசியலை செயல்படுத்தாமல் எவராலும் கடந்து செல்ல முடியாது.

பல கோணத்தில், தமிழிலும் பேசி, மிக உன்னதமாக நடித்த பாரம்பரிய அரசியல் மகா நடிகர் மஹிந்த

தொடர்ச்சி▼





# மலினமான அரசியல் வணிகம்

தொடர்ச்சி▲

ராஜபக்ஷவையே அரசியல் அரங்கில் இருந்து அகற்றுவதற்கு காரணமாக இருந்த தமிழ் மக்களுக்கு, வடக்கில் ஒரு முகத்தையும், தெற்கில் இன்னொரு முகத்தையும், வார்த்தைகளில் மாயாலமும், செயலில் பௌத்த தேசியவாத கோட்பாட்டுச் சித்தாந்தத்திலும் உள்ள ஜனாதிபதி எத்தனை நாளைக்குத்தான் இந்த மக்களை ஏமாற்றலாம் என நினைக்கிறார்?

தமிழ்த் தேசிய கட்சிகள் என சொல்லப்படும் கட்சிகள் தங்களுக்குள் ஐக்கியத்தைப் பேணாத காரணத்தினால் – தமிழ்த் தேசியக் கோட்பாட்டை வலிமையாக முன்னிறுத்த முடியாத தலைவர்கள் உள்ள காரணத்தால் – நாக பாம்பு ஆடுகிறது என்று நாக்கிளிப் புழுக்களும் ஆட முயற்சிக்கின்றன. இந்த முயற்சிகள் எல்லாம் விரைவில் ஆட்டம் கலைந்து, கூட்டம் குறையும். அப்போது புரியும் – அவர்களின் இனவாத சிந்தனை சாமானிய மக்களுக்கும்.

பல தடவைகள் வடக்கு கிழக்குக்கு வருகை தரும் ஜனாதிபதியால் நடந்தவை என்ன? எத்தனை ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன ? இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட நிலங்களின் முடிவு என்னவாயிற்று? பௌத்தமயமாக்கல், பௌத்த ஆலயங்களுக்குக் காணிகபளிகரம், வனத் திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், பறவைகள் சரணாலயம் போன்றவற்றுக்கு அபகரிக்கப்பட்ட நிலங்களை எப்பொழுது விடப் போகிறார்? இதனால் உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுகிறது என்பதனை கூட அவர் புரிந்து கொள்ளத் தயாராக இருக்கிறாரா? “பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை” எனும் கிராமத்து அடைமொழி தான் ஜனாதிபதியின் வடக்கு விஜய செயல்பாட்டின் சாராம்சமாக இருக்கிறது.

மன்னார் காற்றாலை விடயத்தில் அவர் கூறிய வாக்குறுதிகள் எதனையும் செயல்படுத்தாமல. – மக்களினுடைய போராட்டத்தை கிஞ்சித்தும் மதிக்காமல் – அதிகார ஆணவ மேலாதிக்கத்தோடு கோப்பரேட் வணிகர்களின் நிகழ்ச்சி நிரலுக்குள் செயல்படுவதுதான் தன்னை நம்பிய இந்த மக்களுக்கு செய்யக்கூடிய மிகப்பெரிய துரோகம்.

கொழும்பு வீதிகளில் கூட உடற்பயிற்சி செய்யாதவர் யாழில் வந்து உடற்பயிற்சி செய்தமை அரசியல் குறளி வித்தை என்றே கூற வேண்டும். நடிப்பதற்கும் ஏமாற்றுவதற்கும் ஓர் எல்லை உண்டு என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வரலாறு தெரியாத சமூகம் செல்பி மோகத்தால் அள்ளுண்டு அலைகின்றது. அர்சுனாவுக்கு வாக்கு போட்ட யாழ்ப்பாணிகளுக்கு ஜனாதிபதியோடு செல்பி எடுப்பது ஒன்றும் பெரிதில்லை.

தாமே கொள்கை கூட்டமென அலைந்து திரிகிறது யாழ்ப்பாணிய சமூகம். அவர்களின் உயர் மத்திய குழாமின் எழுநிலை சிந்தனைக்கு மாறாக அசிங்கப்பட்டு நிற்கிறார்கள். இந்த யதார்த்தத்தை உணராத சமூக கட்டமைப்பில் மாற்றம் நிகழாத வரை பல்லாயிரம் போராளிகள் மடிந்ததும், இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதும், தியாகங்கள் அனைத்தும் காற்றில் பறந்து விட்டன என யாழ்ப்பாணிய மக்கள் எண்ணுகிறார்களோ என தோன்றுகிறது. இதற்குள் தாங்கள் பெரிய அறிவாளிகள் என வீரதீரம் பேசுவதற்கும் ஒரு கூட்டமுண்டு. ஆனால் அந்தக் கூட்டம் அதிகார வர்க்கத்தோடு இருட்டு வீட்டு உறவில் ஒளிந்து இருக்கும். இனத்துரோகிகளோடு துணை நிற்கும். சமூகமாக தமிழ் சமூகம் மாறி வருவது தமிழ்த் தேசிய அரசியலின் தலைமை வெற்றிடமும் அரசியல் அனாதைத்துவத்தின் வெளிப்பாடாகவுமே காணப்படுகிறது.

தமிழ்த் தேசிய அரசியலில் முக்கிய அங்கம் வகிக்கும் தமிழரசு கட்சி ஒருபோதும் புரிந்து கொள்ளப் போவதில்லை. அக்கட்சியில் உள்ள பதவிச் சண்டையே தமிழ் அரசியலின் தேக்க நிலைக்கு காரணம்.

மக்களுக்கு உண்மை புரியும் வரை பொய்மை ஊரெல்லாம் வலம் வந்து கொண்டே இருக்கும். இன்னும் நான்கு ஆண்டுகளில் எவ்விதமான நடிப்புகளை எல்லாம் கண்டுகளிக்க போகிறோமோ அந்தப் புத்தகபெருமானுக்கே வெளிச்சம்.



வி.எஸ்.சிவகரன்




# சுதுமாலை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் இம்முறையும் சிறப்புற நடந்த பட்டிப் பொங்கல்

சுதுமாலை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தினால் 16ஆவது ஆண்டாக சிறப்புற முன்னெடுக்கப்படும் கோமாதா பூஜையும் பட்டிப்பொங்கல் நிகழ்வும் இம்முறையும் நேற்று முன்தினம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் 200 இற்கு மேற்பட்ட கோமாதாக்கள் பங்கேற்றுக்கொண்டமை சிறப்பு.

இந்த நிகழ்வின் போது மாடுகளை வளர்ப்போருக்கு ஊக்குவிப்பாக மாடுகளுக்கான தவிட்டு மூடைகளும், குடும்ப நல் வாழ்வுக்காக அரிசி மூடைகளும், அவர்களின் குழந்தைகளின் கல்வி ஊக்குவிப்பிற்காக கல்வி உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

முருகமூர்த்தி ஆலய குருவினதும் தொண்டர்களதும் முயற்சியில் நலன் விரும்பிகளின் அனுசரணையுடன் இந்நிகழ்வு வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


















# ஹட்டன் குடாகமவில் நேற்று மதியம் விபத்து லொறியும் வானும் மோதியதில் மூவர் காயம்!

**(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)**

ஹட்டன் குடாகம இஸ்லாமிய பள்ளி அருகில் நேற்று மதியம் 2.00 மணிக்கு சிறிய "படி லொறி"யும் வானும் மோதியதில் மூவர் காயமடைந்தனர். அவர்கள் மூவரும் கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என ஹட்டன் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து ஹட்டன் போக்கு வரத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.






# கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவர் பிணையில்

**(மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு கேரளா கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு கட்டைக்காடு கிழக்கு பகுதியில் மருதங்கேணி பொலி ஸாரால் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள் ளப்பட்டது

இதன் போது சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த இளைஞர் ஒரு வரை பொலிஸார் சோதனை செய்தபோது உடைமையில் 150 கிராம் கேரள கஞ்சாவை வைத்திருந்தமைக்காக அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணைகளின் பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காக நேற்று கிளி நொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப் பட்டவேளை அவரைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

**ஆசிரியர் குறிப்பு**

இந்த விடயமே நேற்று "மாலை முரசு" இதழில் "கட்டைக்காட்டில் 150 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது" என்ற தலைப்பில் 6 ஆம் பக்கத்தில் செய்தியாகப் பிரசுரமாகியிருந்தது. நமது செய்தியாளர் "150 கிராம் கஞ்சாவுடன் கைது" என்று எழுதிய விடயத்தைப் பக்கத்தில் செய் தியாக்குப் போது தவறுதலாக 150 கிலோ கஞ்சாவுடன் கைது என்று பிரசுரமாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)



# இந்தியக் கடற்படையினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ரிப் படகு!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கை மற்றும் இந்திய கடற்படைகளுக்கு இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், இந்திய கடற்படையால் இலங்கை கடற்படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ரிப் படகு கடந்த வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் உள்ள மேற்கு கடற்படை கட்டளை தலைமையகத்தில் இலங்கைக் கடற்படையிடம் உத்தியோகப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

அதன்படி, பதின்மூன்றாவது இந்தியா - இலங்கை பணியாளர்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சிறிநிவாஸ் மடுல்லவின் தலைமையில் இந்த ரிப் படகின் உத்தியோகப்பூர்வ கையளிப்பில், இலங்கைக் கடற்படை சார்பாக மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜகத் குமார கலந்து கொண்டார்.

மேலும், இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையே நினைவுப் பரிசுக்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.









# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தைப்பொங்கல் நேற்று ஹட்டன் நகரில்!

**(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)**

“ஒற்றுமையை விதைப்போம் – நாட்டிற்கு அறுவடை செய்வோம்“ என்ற கருப்பொருளில்

தேசிய இளைஞர் சேவை மன்றமும், இலங்கை இளைஞர் சங்க கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த தேசிய இளைஞர் தைப்பொங்கல் விழா நேற்று நுவரெலியா – ஹட்டன் நகரில் சிறீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வளாகத்தில் இடம் பெற்றது.

நேற்றுக் காலை 6.00 மணிக்கு ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் காலை பூஜை நடைபெற்று, அதன் பின்னர் கலாசார நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. மாலை 6.30 மணிக்கு ஹட்டன் பஸ் நிலைய வளாகத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இசைக் குழுவும் நடனக் குழுவும் இணைந்து இசை நிகழ்ச்சி நடத்தின.

காலை பூஜையின் பின்னர் தமிழ் கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் திலிந்து சமன் என் நாயக்க மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி,

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவரும் இலங்கையின் இளைஞர் அலுவல்கள் தொடர்பான பொது இயக்குநருமான சட்டத்தரணி சுபுன் விஜேரத்ன மற்றும் இளைஞர் சங்கக் கூட்டமைப்பின் அதிகாரிகளும், இளைஞர் கழக உறுப்பினர்களான இளைஞர் – யுவதிகளும் கலந்து கொண்டனர்.













# அரசியல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி மறைவு

தமிழகத்தைச் சேர்ந்த நீண்ட நாள் நண்பரான மூத்த பத்திரிகையாளரும் சிறந்த அரசியல் ஆய்வாளருமான என். சத்தியமூர்த்தி (வயது73) சிறிதுகால சுகவீனத்துக்கு பிறகு தைப்பொங்கல் தினத்தன்று சென்னையில் காலமானார்.

சமகால சமூக - அரசியல் வரலாற்றில் மிகுந்த ஆர்வம் கொண்டவரான சத்தியமூர்த்தி இந்திய மற்றும் சர்வதேச அரசியல் விவகாரங்கள் குறித்து பல தசாப்தங்களாக நிறையவே எழுதிவந்தார். இந்தியாவின் அயல்நாடுகளின் - குறிப்பாக இலங்கை மற்றும் மாலைதீவின் - அரசியல் விவகாரங்கள் குறித்து சத்தியமூர்த்தி போன்று இந்தியாவைச் சேர்ந்த வேறு எந்தஒ பத்திரிகையாளரோ அல்லது அரசியல் ஆய்வாளரோ தொடர்ச்சியாக நீண்டகாலம் எழுதியிருக்கின்றார்கள் எனக் கூறமுடியாது.

புதுடில்லியில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் சிந்தனைக் குழாம் 'ஒப்சேர்வர் றிசேர்ச் பவுண்டேசனின்' சென்னைப் பிரிவின் தலைவராக அண்மைக்காலம் வரை செயற்பட்ட சத்தியமூர்த்தி இலங்கையின் முக்கியமான தனியார்தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் ஆலோசகராகவும் சில வருடங்கள் பணியாற்றினார். சில வாரங்களுக்கு முன்னர் சுகவீனமடையும் வரை இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகைகள் சிலவற்றிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் ஒரு தமிழ்ப் பத்திரிகையிலும் அவர் அரசியல் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வந்தார்.



- வீரகத்தி தனபாலசிங்கம் -

இலங்கையின் சகல தரப்பு அரசியல் தலைவர்களுடனும் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்த அவர் இலங்கையின் முக்கியமான அரசியல் ஆய் வாளர்களுக்கு எந்தளவுக்கும் குறைவில்லாத அளவுக்கு இலங்கை யின் அரசியல் விவகாரங்கள் குறித்து தெளிவான அரசியல் ஆய்வுகளை எழுதும் ஆற்றல் படைத்தவராக விளங்கினார். தனிப்பட்ட முறையில் ஆலோசனை கூறுமளவுக்கு எமது அரசியல் வாதிகள் பலருடன் நெருக்கமான பரிச்சயத்தை அவர் கொண்டிருந்தார்.

இலங்கையின் முன்னணி தேசிய தமிழ்ப் பத்திரிகையான வீரகேசரியை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 'சமகாலம்' சஞ்சிகையின் ஆசிரியராக நான் பணியாற்றிய காலப் பகுதியில் (2012 – 2015) சத்தியமூர்த்தி எனக்கு ஆலோசனைகளை வழங்கியமையுடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் விவகாரங்கள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளை கிரமமாக எழுதிவந்தார்.

இலங்கையில் தமிழில் சமூக - அரசியல் விவகாரங்கள் தொடர்பான ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவந்த புதிய முயற்சியான எமது சஞ்சிகையை மேம்படுத்த வேண்டும் என்ற அக்கறையில் சத்தியமூர்த்தி தமிழகத்தையும் புதுடில்லியையும் சேர்ந்த அரசியல் ஆய்வாளர்களையும் எமக்காக எழுதவைத்தார்.

பத்திரிகைத்துறை சார்ந்து எனக்கும் அவருக்கும் இடையில் தொடங்கிய தொடர்பு நாளடைவில் தனிப்பட்ட முறையில் நெருக்கமான நட்பாக மாறியது. கொழும்புக்கு வந்த சந்தர்ப்பங்களில் அவர் என்னைச் சந்திக்கத் தவறியதில்லை. அவரது குடும்பத்தவர்களும் கூட எனக்கு பரிச்சயமானவர்களாக மாறினார்கள்.

குறைந்தபட்சம் இரு வாரங்களுக்கு ஒரு முறை என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுவதை சத்தியமூர்த்தி வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒவ்வொரு சம்பாஷணையும் ஒரு அரை மணித்தியாலத்தைக் கடந்து நீடிக்கும். அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக பேசுவதற்கு முன்னர் எனது உடல்நிலை குறித்து மிகுந்த அக்கறையுடன் விசாரிக்கும் அவருடன் இறுதியாக 16 டிசம்பர் 2025 என்னுடன் பேசினேன். மீண்டும் பேசுவோம் என்று இருவரும் கூறி சம்பாஷணையை முடித்துக்கொண்டோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அதுவே எமக்கிடையிலான இறுதிச் சம்பாஷணையாகிப் போய் விட்டது.

அயலகத்தைச் சேர்ந்த சிறந்த பத்திரிகையாளர் மற்றும் அரசியல் ஆய்வாளரை நாம் இழந்துவிட்டோம். அவரது மறைவு அரசியல் ஆய்வுத்துறைக்கு பாரிய இழப்பாகும். அவரது மகனுக்கும் மனைவிக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



# எதிர்ப்பரசியலின் எதிர்காலம்

தமிழரசியல் எப்போதும் எதிர்ப்பரசியலாகவே இருந்திருக்கிறது, இப்போதும் இருக்கிறது, இனியும் இப்படியே இருக்கப் போகிறதா?

அன்றும் இன்றும் அரங்கேறிய, அரங்கேறும் சம்பவங்கள் தமிழரசியல் என்றாலே எதிர்ப்பரசியல் தான் என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவனவாகவே அமைந்தன, அமைந்து கொண்டும் இருக்கின்றன.

மீன்களிற்கு நீந்தவும் தமிழர்களிற்கு எதிர்ப்பரசியல் செய்யவும் பழக்கத் தேவையில்லை. எதிர்ப்பரசியல் எங்களுக்கு கை வந்த கலை. தென்னிலங்கையின் இரு பெரும் கட்சிகளில் மாறி மாறி யார் ஆட்சிக்கு வந்தாலும் நாங்கள் எதிர்ப்பரசியலே செய்வோம் என்ற எங்கள் அரசியல்வாதிகளின் செயற்பாடு அவர்களையும் மாறி மாறி நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துக் கொண்டிருந்தது.

ஆனால், கடந்தாண்டு தென்னிலங்கையில் மூன்றாவது சக்தியான ஜே.வி.பி. ஆட்சியை பிடித்ததும், அதிலும் வடக்கில் அவர்களிற்கு கிடைத்த எதிர்பாராத ஆதரவும், காலங்காலமாக நாங்கள் செய்து வந்த எதிர்ப்பரசியல் templateஐ கேள்விக்கும் மீளாய்வுக்கும் உட்படுத்தி விட்டது.

தேர்தல் காலங்களில் தமிழ் கட்சிகளினூடாக தமிழ் மக்களின் வாக்குகளை வேட்டையாட, அதிகாரப்பகிர்வு, நல்லிணக்கம் என்ற வாக்குறுதிகளில் விருந்து படைக்கும் தென்னிலங்கை பெருங் கட்சிகள், ஆட்சியில் ஏறியதும் சாக்கு போக்குகள் சொல்லி, காலத்தைக் கடத்தி வாக்குறுதிகளை காற்றில் பறக்க விடுவதும், வரலாறு எங்களுக்கு சொல்லித் தந்த பாடங்கள்.

அதிகார பரவலாக்கல், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்களை விடுவித்தல், பௌத்த மயமாக்கல்,



- ஜுட் பிரகாஷ் -

அரசியல் கைதிகள் பிரச்சினை, போர் குற்றங்களிற்கான பொறுப்புகூறல் போன்ற தமிழர் தாயகப் பிரதேசங்களிற்கே தனித்துவமான பிரச்சினைகள் எதனாலும் பாதிக்கப்படாத, அக்கறையே படாத, எதிர்க் கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு நாங்களும் எதிர்ப்பரசியல் செய்வது ஒப்புக்கு சப்பாணி போன்ற செயற்பாடு போன்றல்லவா தோன்றுகிறது?

ஆட்சியை தீர்மானிக்கும் வலுவுள்ள இரண்டில் மூன்று பெரும்பான்மையுடன் ஆட்சியில் இருக்கும் கட்சிக்கு எதிராக வடக்கு, கிழக்கில் இருந்து தெரிவான பத்தோ, பன்னிரண்டோ நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்பரசியல் செய்து எங்கள் மக்களிற்கு என்ன நன்மைகளை கொண்டு வந்து கொட்டப் போகிறோம்?

அதே நேரத்தில், எங்களது தனித்துவமான அடையாளங்கள், அடிப்படை பிரச்சினைகள் எல்லாவற்றையும் தூக்கிக் கடாசி எறிந்து விட்டு, அடிக்கும் அலையில் அள்ளுபட்டு, நாம் இனி ஒரே நாடு என்று சிங்கள தேசியத்தோடு ஜோதியில் கலக்கும் அரசியலும் மிகவும் ஆபத்தானது; எங்களது எதிர்கால சந்ததியின் இருப்பையே நாசமாக்க வல்லது.

தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றத்தால் அமைந்திருக்கும் புதிய களத்தில் நாங்கள் எவ்வாறு எங்களது இருப்பைத் தக்க வைக்கவும், எதிர்காலத்தை வளமாக்கவும் பயன்படுத்தப் போகிறோம்? ஐந்தாண்டுகளிற்கு ஒருமுறை அரங்கேறும் தேர்தல் திருவிழாவை மட்டும் நோக்கமாக வைத்து சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் எங்களது தமிழரசியல் செயற்பாடுகளை கைவிட்டு எப்படி, எப்போது வெளியே வரப் போகிறோம்?

தமிழர் பகுதிகளில், The Pied Piper of Hamelin போல, ஆழமாகவும் வெற்றிகரமாகவும் ஊடுருவத் தொடங்கியிருக்கும் ஜே.வி.பியின் grass roots செயற்பாடுகள் எங்களுக்கு ஒன்றும் புதியது அல்ல. அறுபதுகளில் தமிழரசு செய்ததும், எழுபதுகளிலும் எண்பதுகளிலும் இயக்கங்கள் செய்து காட்டியதும் இந்த grass roots activism தான். மாகாண சபைத் தேர்தலிற்கு காத்திருக்கும் இன்றைய காலகட்டத்தில், எங்கள் பிரதேசங்களில் நிலைகொள்ள முயலும் ஜே.வி.பியை முறியடிக்க, நாங்கள் செய்ய வேண்டியதும் இந்த grass roots activism தான்.

யுத்தத்தாலும் யுத்தம் முடிவடைந்ததும் நிலவிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களாலும் தமிழரசியலால் grass roots செயற்பாடுகளில் ஈடுபட முடியாத சூழ்நிலை நிலவியது. ஜே.வி.பியின் ஆட்சியில் மீண்டும் grass roots செயற்பாடுகளிற்கு தமிழரசியல் மீண்டும் திரும்புவது அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுகிறது. தமிழரசியலின் grass roots செயற்பாடுகளினூடக எங்கள் மக்களின் மனவோட்டத்தை மட்டுமன்றி அவர்களது தேவைகளை கண்டறிந்து, புலத்தில் எங்களிற்கு இருக்கும் அபரிதமான

தொடர்ச்சி▼



# எதிர்ப்பரசியலின் எதிர்காலம்

தொடர்ச்சி▲

பொருளாதார வலுவால் எங்கள் மக்களின் தேவைகளை, அரசிடம் கையேந்தாது நாங்களே தீர்த்து வைக்கவும் முடியும்.

கண்டது நின்றதற்கெல்லாம் போர்க் கொடி தூக்காமல், பிரச்சினை அடிப்படையிலான அரசியல் கூட்டணிகள் (issue based coalitions) நோக்கிய அரசியல் பயணத்திற்கு தமிழரசியல் பரிணமிக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகிறது. பிரச்சினை அடிப்படையிலான அரசியல் கூட்டணிகள், தென்னிலங்கையின் எதிர்க்கட்சிகளோடுமட்டும்மட்டுப்படுத்தபடாமல் ஆளும் கட்சியுடனும் பரந்து பட்ட தான கூட்டணியாக வியாபித்திருப்பதே எங்கள் மக்களிற்கு நன்மை பயக்கும்.

யாழ்ப்பாணத்தில் வேட்டி கட்டி கொண்டு ஒஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் பொங்கல் பானையில் அரிசி போடும் காணொளியும், கனடா தேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினரான தமிழ் பெண்மணி ஜுனைடா நாதன் சேலை கட்டி கொண்டு அடம்பனில் பொங்கல் கொண்டாடும் காணொளியும், தமிழர் பிரதேசங்களிற்கு மேற்குலகம் இன்னும் கொடுத்து வரும் முக்கியத்துவத்தை பறைசாற்றுகின்றன.

இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் மேற்குலகஇராஜதந்திரிகளுடனான தமிழரசியலின் ஊடாட்டம், அரசியல் மற்றும் பொறுப்பு கூறல் தொடர்பானவையாக மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் எங்கள் மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை முன்மொழிந்து, அவற்றை அமுல்படுத்த அந்த நாடுகளின் அனுசரணையை பெறுவதற்கான நோக்கத்தை கொண்டவையாக மாறுவதும் காலத்தின் தேவையாகும்.

எதிர்ப்பரசியல் தமிழரசியலின் அடையாளம் அல்ல; அது ஒரு கட்டத்தில் எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கருவி மட்டுமே. இன்று அந்தக் கருவி மங்கியிருக்கிறது. அதைவிட சக்திவாய்ந்த புதிய கருவிகளை உருவாக்க வேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது. வெறும் எதிர்ப்பால் வரலாறு மாறியதில்லை; மாற்றங்களை உருவாக்கியவை எப்போதும் களத்தில் நின்று, மக்களுடன் கலந்து, மக்களின் வாழ்க்கையை தொட்ட அரசியல் முயற்சிகளே.

தமிழரசியல் இனி தேர்தல் நேர முழக்கங்களால் அல்லாமல், மக்களின் அன்றாட வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வல்ல அரசியலாக மாற வேண்டும். இந்த மாற்றம் நடந்தால் மட்டுமே, எங்கள் அரசியல் மீண்டும் மக்களுக்கானதாக மாறும். இல்லையெனில், தமிழரசியல் வெறும் நினைவுச் சின்னமாக மாறிவிடும்.

தமிழரசியல் எதிர்ப்பரசியலில் இருந்து சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான அரசியலிற்குப் பயணிக்கத் தொடங்க வேண்டும். தமிழரசியல் இனி கேள்வி கேட்பதோடு மட்டும் நிற்காமல், தீர்வுகளை உருவாக்கும் அரசியலாக மாற வேண்டும்.

அந்த மாற்றத்தை நாம் இப்போது தொடங்கவில்லை என்றால், வரலாறு அதை நம்மீது திணித்து விடும். அந்த வரலாற்று திணிப்பு நமக்கு சாதகமாக அமைந்து விடாது. ஆகவே, இந்த மாற்றம் ஒரு தேர்வு அல்ல; இந்த மாற்றம் ஒரு அவசியம். தமிழரசியல், இனி எதிர்ப்பதற்கான அரசியலாக மட்டுமல்லாமல், எங்கள் மக்களின் எதிர்காலத்தை கட்டமைப்பதற்கானதாக மாற வேண்டும்.

தமிழரசியல் மாறுமா?





# போதைப்பொருள் பயன்படுத்திவிட்டு வாகனம் செலுத்திய 300 சாரதிகள் கைது

நச்சு போதைப்பொருள் பயன்படுத்திவிட்டு வாகனம் செலுத்திய 300 இற்கு மேற்பட்ட சாரதிகள் கடந்த 15 நாள்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பீ.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் மது போதையில் வாகனம் செலுத்திய 7500 இற்கு மேற்பட்ட சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிரதி பொலிஸ் மா அதிபர் கூறினார்.

போதைப்பொருள் மற்றும் மது பானம் அருந்திவிட்டு வாகனம் செலுத்துவதினால் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் நடமாடும் இரசாயன ஆய்வுகூடங்களில் போதைப்பொருள் பயன்படுத்திய சாரதிகளின் சிறுநீர் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் டபிள்யூ.பீ.ஜே.சேனாதீர தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் கடத்தல்காரர் கம்பஹா பபாவுக்கு விளக்கமறியல்



திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான 'கம்பஹா பபா' எனப்படும் தினேஷ் நிஷாந்த குமாரவை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நேபாளத்தில் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு அழைத்துவரப்பட்ட கம்பஹா பபா 90 நாள்கள் பேலியகொட பொலிஸாரினால் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

களனி குற்றப் புலனாய்வு பிரிவினரால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

கம்பஹா பபா எனப்படும் தினேஷ் நிஷாந்த குமார கடந்த வருடம் ஒக்டோபர்மாதம்கணேமுல்லசஞ்சீவகொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரான இஷார செவ்வந்தியுடன் நேபாளத்தில் கைது செய்யப்பட்டார்.

அதனை தொடர்ந்து சந்தேகநபர்கள் உள்ளிட்ட குழுவினர் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி நாட்டிற்கு அழைத்துவரப்பட்டனர்.

# நவகமுவ துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது



கடுவெல – நவகமுவவில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பியகம பகுதியில் வைத்து நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை திட்டமிட்டமை மற்றும் அதற்கான உதவிகளை வழங்கிய ஒருவரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் பொரளையைச் சேர்ந்த 24 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி நவகமுவ பகுதியில் வீடொன்றிலிருந்த மூவரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துடன் மற்றைய இருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

டுபாயில் வசித்து வரும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளியொருவரின் வழிநடத்தலில் இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மீண்டும் மட்டக்களப்பு, திருகோணமலை ரயில் சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை




அனர்த்தங்களினால் தடைப்பட்டிருந்த சில ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – திருகோணமலை இடையிலான இரவுநேர தபால் ரயில் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணிக்கும் புலதிஸி நகர்சேர் கடுகதி ரயிலும், கொழும்பு – மட்டக்களப்பு இடையிலான உதயதேவி கடுகதி ரயிலும் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் வடக்கு ரயில் மார்க்கத்தின் புனரமைப்பு பணிகளை எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய மஹவ முதல் அனுராதபுரம் வரையிலான ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்படுகின்றன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# குறைந்தபட்ச வெப்பநிலை நுவரெலியாவில் நேற்று பதிவு



இலங்கையில் நேற்று பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை நுவரெலியா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் வெப்பநிலை 8.0 பாகை செல்சியசாகக் குறைந்திருந்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகாலை வேளையில் பண்டாரவளையில் 11.6 பாகை செல்சியசாக குறைந்தபட்ச வெப்பநிலையும், பதுளையில் 14.4 டிகிரி செல்சிஸ் வெப்பநிலையும் பதிவாகியுள்ளது.

வடமத்திய மாகாணத்தில், பொலன்னறுவையில் 19.4 பாகை செல்சியசாக குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது.



# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு விவசாயம் செய்ய ஆபத்தான காணிகள்

டித்வா சூறாவளி மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக அதிக ஆபத்தான காணிகளை, குடியிருப்புகளுக்குப் பயன்படுத்தாத அடிப்படையில், விவசாய நடவடிக்கைகளுக்காக மட்டும் அதன் முன்னாள் உரிமையாளர்களுக்கு விளைச்சல் வரி முறையின் கீழ் மீள வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விசேட திருத்தப்பட்ட வழிகாட்டல் கோவை பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, அதிக ஆபத்தான நிலையில் உள்ள வீடுகள் அமைந்திருந்த காணிகள், ஒதுக்கப்பட்ட நிலங்களாக பாதுகாப்பதற்காக அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படவுள்ளன.

அவ்வாறு அதிக ஆபத்தான வலயங்களில் உள்ள வீடுகளுக்குப் பதிலாக மாற்று நிலங்களில் வீடுகள் அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், தற்போதுள்ள அபாயகரமான காணிகளை அரசாங்கத்திற்கு வழங்க உரிமையாளர்கள் உடன்பட வேண்டும் எனவும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அனர்த்தத்தினால் வீடுகள் சேதமடைந்த மக்களுக்கு இழப்பீடு வழங்கும் திட்டத்தை மிகவும் வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலங்களாக மாற்றப்பட்ட காணிகளை, அனர்த்தம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அதன் உரிமையாளராக இருந்தவர் அல்லது அவரது வாழ்க்கைத் துணைவருக்கு மட்டும் விவசாயத்திற்காக வழங்க முடியும்.

பிரதேச அனர்த்த முகாமைத்துவ மற்றும் நிவாரண சேவைக் குழுவின் பரிந்துரையின் பேரில் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் இது நடைமுறைப்படுத்தப்படும்.

இருப்பினும், அந்த காணிகளில் உள்ள வீடுகள், மலசலகூடங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டடங்களும் முழுமையாக அகற்றப்பட வேண்டும் என்பதுடன், எக்காரணம் கொண்டும் இரவு வேளைகளில் அங்கு தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு நவம்பர் 21 முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற அனைத்து அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த இழப்பீட்டுத் திட்டம் பொருந்தும்.

சூறாவளித் தாக்கத்தினால் சேதமடைந்த வீடுகளை மதிப்பிட்டு, முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு 50 லட்சம் ரூபாவும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு 25 லட்சம் ரூபாவும் வரை இழப்பீடு வழங்கும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் கடந்த 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டல்களில் சில மாற்றங்களைச் செய்து, கடந்த 14ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த புதிய வழிகாட்டுதல் கோவை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு மதிப்பீடுகள் இன்றி முதற்கட்டமாக 5 லட்சம் ரூபா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் 3 லட்சம் ரூபா ஆரம்பத்தில் வழங்கப்படும்.

வீட்டின் கூரை, சமையலறை அல்லது சுவர்கள் அனர்த்தங்களுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய வகையில் புனரமைக்கப்பட்ட பின்னர் மீதி 2 லட்சம் ரூபா வழங்கப்படும்.

அதேநேரம், அனர்த்தங்களினால் அடையாள அட்டைகள் அல்லது காணி உறுதிப்பத்திரங்களை இழந்தவர்களுக்கு அவற்றை இலவசமாகப் பெற்றுக் கொடுக்க பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் சிக்கல் ஏற்படும் பட்சத்தில், கிராமியக் குழுக்களின் பரிந்துரையின் பேரில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அல்லது பின்னர் சமர்ப்பிக்கும் நிபந்தனையின் கீழ் இழப்பீடுகளை வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்த பொலிஸார் மேலதிக கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.







# கல்வி மறுசீரமைப்பிலிருந்து பின்வாங்கப் போவதில்லை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கல்வி மறுசீரமைப்புச் செயல்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ள மாற்றங்களிலிருந்து அரசாங்கம் ஒரு அங்குலம் கூட பின்வாங்கவில்லை. பின்வாங்கப் போவதுமில்லை எனவும் திட்டமிடப்பட்ட பணிகள் அதே வேகத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் பிரதமரும் கல்வியமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தின் கல்வி நடவடிக்கைகள் குறித்து கல்வி அதிகாரிகள் மற்றும் அதிபர்களுடன் நேற்று புத்தளம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 23,000ஆசிரியர்களைபுதிதாகஇணைத்துக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வயது எல்லை தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து, தகுதியுள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தலைமைத்துவப் பண்பு கொண்ட இளைஞர்கள் இத்துறைக்கு வர வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கு முதல் இரண்டு மாதங்களுக்குள் டிஜிட்டல் திரைகள் மற்றும் இணைய வசதிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கல்விமறுசீரமைப்புஎன்பதுஒருநீண்டகாலச் செயல்பாடு எனச் சுட்டிக்காட்டிய பிரதமர், ஒரு சிறிய குழுவினர் தமது குறுகிய நோக்கங்களுக்காக முன்வைக்கும் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல், அதிகாரிகள் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையைத் தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இது பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் செயல்பாடு என்பதால் இதில் சமரசம் கிடையாது என அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், பாடசாலைகளின் கட்டடங்களை மட்டும் அபிவிருத்தி செய்யாமல், மாணவர்களின் போக்குவரத்து வசதிகள், சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் குறித்தும் கவனம் செலுத்துமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

குறிப்பாக, 50 மாணவர்களுக்கும் குறைவாகக் கொண்ட பாடசாலைகளின் தரம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மதத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.












# உயர்தரப் பரீட்சையின் மனைப் பொருளியல் செயன்முறை பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் மனைப் பொருளியல் பாடத்துக்கான செயன்முறை பரீட்சைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள் ளன.

இந்த செயன்முறை பரீட்சைகள் 42 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதிச் சீட்டுகள் உரிய பாடசாலையின் அதிபருக்கும், தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதிச் சீட்டுகள் அவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு பரீட்சார்த்திக்கும் அனுமதிச்சீட்டு கிடைக்கப்பெறவில்லையெனில், நாளை முதல் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்வதற்கு தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ஜிந்துபிட்டி துப்பாக்கிச் சூடு; சந்தேகநபர்கள் நால்வர் கைது

கொழும்பு – ஜிந்துபிட்டியில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக மூன்று விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கிச்சூடு திட்டமிட்ட குற்றக் குழுக்களுக்கு இடையிலான மோதல் காரணமாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு முச்சக்கரவண்டியொன்றில் பிரவேசித்த சந்தேகநபர்கள் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருந்த நிலையில், அதில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்தார்.

அத்துடன், இந்த சம்பவத்தில் காயமடைந்த 4 வயதுடைய சிறுவனும், 3 வயதுடைய சிறுமியும் சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.



# மக்களாட்சி செய்த புரட்சித் தலைவர்: எம்.ஜி.ஆருக்கு விஜய் புகழ் வணக்கம்!



எம்.ஜி.ஆர் பிறந்த நாளில், அவருக்கு என் புகழ் வணக்கத்தைச் செலுத்து கிறேன் என த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. நிறுவனத் தலைவருமான எம்.ஜி.ஆரின் 109 ஆவது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட் டது. இதையொட்டி அரசியல் கட்சி தலைவர்கள் அனைவரும் அவ ருக்கு புகழஞ்சலி செலுத்தி வருகின் றனர்.

இந்நிலையில், த.வெ.க. தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில்,

“தமிழக மக்களின் நெஞ்சங்களில் பொன்மனச் செம்மலாக, ஏழை, எளியோ ருக்கான நலத்திட்டங்களின் நாயகராக, பேரறிஞர் அண்ணாவின் ஜனநாயகப் பாதையில், சாமானியர்களுக்கும் அதிகா ரமளித்து, மக்களாட்சி செய்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பிறந்த நாளில், அவருக்கு என் புகழ் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.” என்று அவர் தெரிவித் துள்ளார்.

# காங்கிரஸ் நிர்வாகிகளுடன் ராகுல் காந்தி ஆலோசனை




தமிழக சட்டப்பேரவை தேர்தல் குறித்த ஆய்வுக் கூட்டம் டில்லியில் நேற்று நடை பெற்ற நிலையில், அக்கூட்டத்தில் பெரும் பாலான நிர்வாகிகள் தி.மு.கவுடன் கூட்டணி தொடர வேண்டும், அதே நேரத் தில் தி.மு.கவிடம் அதிக இடம், ஆட்சி யில் பங்கும் கேட்க வேண்டும் என்று வலி யுறுத்தியதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ்நாடு காங்கிரஸ் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் திமுக கூட்டணி யில் நீடித்து வருகிறது. இந்நிலையில் தற்போது அதிக இடம், ஆட்சியில் பங்கு கோரிக்கை காங்கிரஸில் வலுப்பெற்று வருகிறது. தி.மு,க கூட்டணியில் கிடைக்கா விட்டால், த.வெ.கவுடன் கூட்டணி வைத்து பெறுவது என மாற்று யோசனையும் காங் கிரஸில் சில தலைவர்கள் முன்வைத்து வருகின்றனர். சமூக வலைதளங்களில் பதிவுகளையும் பலர் பகிர்ந்து வருகின் றனர்.

இந்நிலையில் தி.மு.கவுடன் கூட்டணி பேச்சு நடத்த காங்கிரஸின் தமிழக மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் 5 பேர் கொண்ட குழு வும் அமைக்கப்பட்டது. இதன்தொடர்ச்சி யாக ஜனநாயகன் திரைப்படத்துக்கு ஆதரவாக காங்கிரஸார் பதிவிடுவ தும், ஜனநாயன் பொங்கல் வைக்க முற்படுவது போன்ற செயல்கள் திமுகவு டனான கூட்டணியை முறித்துக்கொண்டு, தவெகவுடன் கூட்டணி வைப்பதற்கான ஆயத்தமே என தகவல் பரவியது. இந்த நடவடிக்கைகள் திமுக தலைமைக்கு மேலும் எரிச்சலூட்டியதாக தெரிகி றது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலை மையிடம் செல்வப்பெருந்தகை, ப. சிதம்பரம் உள்ளிட்ட தலைவர்கள் வலியுறுத்தியதாக தகவல் வெளியாகி யுள்ளது. இதன்தொடர்ச்சியாக சட்டப் பேரவை தேர்தல் ஆயத்த பணிகளை மேற்கொள்ள அகில இந்திய காங்கி ரஸ் தலைமை ஆலோசனை கூட்டத்தை கூட்டியுள்ளது. டில்லியில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு கட்சியின் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே,மூத்த தலைவர் ராகுல் தலைமையில் கூட்டம் நடந்தது. இதில் தமிழக எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், தமிழக காங்கிரஸ் முன் னாள் தலைவர்கள் உள்ளிட்டோரிடம் தனித்தனியாக கருத்துகள் கேட்கப்பட் டன.

# டென்மார்க் உள்ளிட்ட நேட்டோ நாடுகளுக்கு 10 வீதம் வரி விதித்தார் டொனால்ட் ட்ரம்ப்



டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும்பிரித்தானியாஉள்ளிட்ட8நேட்டோ உறுப்பு நாடுகளிலிருந்து அமெரிக்கா வுக்கு இறக்குமதி செய்யப்படும் அனைத் துப் பொருட்களுக்கும் 10 சதவீத வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள் ளார்.

கிரீன்லாந்தை முழுமையாகவும் முற்றாகவும் வாங்குவதற்கான ஒப்பந்தம் எட்டப்படும் வரை இந்த வரி விதிப்பு அமு லில் இருக்கும் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

அதற்கமைய, பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் முதற்கட்டமாக அனைத்துப் பொருட் களுக்கும் இந்த வரி விதிக்கப்படவுள்ளது.

ஜூன் 1 ஆம் திகதிக்கு முன்னர் ஒரு வேளை ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால், இந்த வரி 25 சதவீதமாக அதிகரிக்கப் படும் என ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித் துள்ளார்.

டென்மார்க்கின் சுயாட்சி பிராந்திய மாகவுள்ள உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்தை விலைக்கு வாங்குவதற்கு அமெரிக்கா நீண்டகாலமாக ஆர்வம் காட்டி வருகிறது.

எனினும், டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய உறுப்பு நாடுகள் அதற்கு மறுப்பு தெரிவித்து வரும் நிலையில், அந்த நாடுகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் இந்த வர்த் தக வரி விதிப்பை ட்ரம்ப் அறிவித்துள் ளார்.

இந்தத் திடீர் அறிவிப்பு சர்வதேச சந்தையில் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளதுடன், ஐரோப்பிய நாடுகளுக் கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசலை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படு கிறது.

# நடைபெற்று வரும் போராட்டங்கள், வன்முறைகளுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் பொறுப்பேற்க வேண்டும்

## ஈரானின் உச்ச தலைவர் தெரிவிப்பு



ஈரான் முழுவதும் நடைபெற்று வரும் போராட்டங்களில் இடம்பெறும் வன்முறை களுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என்று ஈரானின் உச்ச தலைவர் அய துல்லா அலி கமேனி குற்றம் சாட்டியுள் ளார்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை ஒரு குற்றவாளி என் றும் அவர் வர்ணித்துள்ளார்.

ஈரானுக்கு எதிரான சமீபத்திய கிளர்ச் சியானது சற்று வித்தியாசமானது. ஏனெனில் இதில் அமெரிக்க ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் நேரடியாகத் தலையிட் டுள்ளார்.

ஈரானில் இடம்பெற்று வரும் பரவ லான இரத்தக் களரி மற்றும் அழிவுக ளுக்கு வெளிநாடுகளுடன் தொடர்பு டைய நபர்களே காரணம் என்று கமேனி கூறினார்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவு டன் தொடர்புடையவர்கள் பெரும் சேதங் களை விளைவித்ததுடன், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக ஈரானை உலுக்கி வரும் போராட்டங்களின் போது ஆயிரக் கணக்கானோரைக் கொன்றுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஈரானில் நிலவும் அமைதியின்மைக்கு வெளிநாட்டு சக்திகளே காரணம் என அந்நாட்டு அதிகாரிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர்.

குறிப்பாக, ஈரானின் நீண்டகால புவி சார் அரசியல் எதிரிகளான இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளே இந்த ஸ்திரமற்ற நிலையைத் தூண்டிவி டுவதாகவும், களத்தில் போராட்டங்களை வழிநடத்துவதாகவும் ஈரான் கருதுகி றது.

ஈரான் தனது எல்லைகளுக்கு அப்பால் போரை விரிவுபடுத்துவதைத் தவிர்க்கும் அதேவேளையில், இதற்குப் பொறுப்பானவர்கள் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று கமேனி எச்சரித் தார்.

நாட்டை நாங்கள் போருக்குள் இழுத் துச் செல்ல மாட்டோம், ஆனால் உள் நாட்டு அல்லது சர்வதேச குற்றவாளி கள் தண்டிக்கப்படாமல் தப்பிக்க விட மாட்டோம் என்று அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

# காசாவின் அமைதிக்கான சபையின் உறுப்பினர்களின் பெயர் பட்டியல்



காசாவின் அமைதிக்கான சபையின் உறுப்பினர்களின் பெயர் பட்டியலை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப்இந்தசபைக்கு தலைமை வகிப்பார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிர்வாக உறுப்பி னர்கள் பாலஸ்தீன தொழில் நுட்ப குழுவின் பணிகளை பார்வையிடவுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

அமைதிக்கான சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் காசா வின் நிலைத்தன்மைக்கு முக்கிய பங்காற்றுவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், உறுப்பினர்க ளின் பதவி குறித்த விரிவான தகவல்களை வெள்ளை மாளிகை இதுவரை வெளி யிடவில்லை.

# இன்றைய ராசி பலன்கள்- 18.01.2026




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள்.எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்துகொள்ள இயலாது.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரணையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.சிறப்பான ஆரோக்கியத்திற்கு முறையான உணவுமுறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும்.




ன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவதற்கு நீங்கள் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள்- 18.01.2026




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந் திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கை யான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

# வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று மாட்டுப் பொங்கலும் மாட்டு வண்டிப் பேரணியும்









(எஸ்.கீதபொன்கலன்)

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிற் குட்பட்ட இலங்கைத் துறை முகத்துவாரத் தில் நேற்று சனிக்கிழமை காலை நடை பெற்ற மாட்டுப் பொங்கல் மற்றும் மாட்டு வண்டி பேரணியில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா முதன்மை விருந்தி னராகப் பங்குபற்றினார்.

நிகழ்வில் பேசிய பிரதி அமைச்சர் "இன்றைய இந்நிகழ்வில் பங்கேற்பதில் பெருமை கொள்கின்றேன். பண்பாடு, பாரம்பரியம் மற்றும் கூட்டுப் பெருமை நிறைந்தது இக் கிராமம்.

மக்கள்,கால்நடைகள் மற்றும் நிலம் ஆகியவற்றுக்கிடையிலான பிணைப்பை மதித்து புதுப்பிக்கும் வகையில் இந்த விழா அமைந்துள்ளது.வேளாண்மை மரபையும் கிராமிய வாழ்க்கை முறை யையும் போற்றும் ஒரு அழகிய கொண் டாட்டமாக மாட்டுப் பொங்கல் அமைந் துள்ளமை சிறப்பான விடயமாகும்" – என்று கூறினார்.